**பொள்ளாச்சி நகராட்சி**

**அவசரக் கூட்டம்**

**29.02.2024 தேதி வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு பொள்ளாச்சி நகராட்சி நகர மன்ற கூட்டரங்கில் நடைபெற்ற அவசரக் கூட்டம் நடவடிக்கைகள்**

| வ. எண் | பொருள் விபரம் | தீர்மானம் |
|---|---|---|
| 1 | பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட பகுதியில் 9 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மற்றும் இரண்டு தரைமட்ட தொட்டி உள்ளது. இதில் மார்க்கெட் ரோடு நீருந்து நிலையத்திலிருந்து குடிநீர் ஆனது மேற்காண் தொட்டிகளுக்கு நீர் நிரப்பப்பட்டு 36 வார்டுகளுக்கும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேற்காண் தொட்டிகளில் உள்ள நீரின் அளவை குறிக்கும் அளவுகோல் முற்றிலும் பழுதடைந்துள்ளதால், தொட்டிக்கு வரும் குடிநீர் அளவு துல்லியமாக அளவிட முடியாத நிலையிலும், பொதுமக்களுக்கு விநியோகிக்கடும் குடிநீரின் அளவும் அளவிட முடியாத நிலையில் உள்ளது. எனவே தொட்டிக்கு வரும் குடிநீரின் வரத்தும், நீர் விநியோகிக்கப்படும் அளவும் சரியான முறையில் அளவிட்டால் மட்டுமே நீரின் வரத்து குறைவது கண்டறிய இயலும். மேலும் பொதுமக்களுக்கு குடிநீர் சீரான முறையில் விநியோகம் செய்வது உறுதி செய்ய இயலும். இதற்கு மேற்காண் தொட்டிகளுக்கு Digital Water Level Sensor and Indicator பொருத்துவதன் மூலம் நீரின் அளவு துல்லியமாக அளவீடு செய்ய இயலும். இப்பணியை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.10.80 இலட்சத்தில் தயார் செய்யப்பட்டுள்ளது. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி பணியை மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை குடிநீர் வழங்கல் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 00926/2023/இ1** | **தீர்மானம் எண்.917 அனுமதிக்கப்பட்டது** |
| 2 | பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு மார்க்கெட் ரோடு நீர் உந்து நிலையத்திலிருந்து இருந்து சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மூலம் பொதுமக்களுக்கு சீரான முறையில் வழங்கப்படுகிறது. இதில் மார்க்கெட் ரோடு நீர் உந்து நிலையத்தில் 215 HP Motor மற்றும் Pump மூலம் மகாலிங்கபுரம், சுதர்சன் நகர் மற்றும் KRGP நகரில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளுக்கு 300AC Pipe மற்றும் 200 PVC Pipe மூலம் நீர் ஏற்றம் செய்யப்படுகிறது. இதில் மகாலிங்கபுரம் OHT மற்றும் சுதர்சன் நகர் OHT க்கு செல்லும் குழாய்கள் அடிக்கடி உடைப்பு ஏற்பட்டு குடிநீர் விநியோகம் தடைப்படுகிறது. எனவே, சீரான குடிநீர் பொதுமக்களுக்கு வழங்க இயலாத நிலை ஏற்படுகிறது. மேற்கண்ட OHT க்கு 300DI மற்றும் 200mmDI பிரதான குழாய் மாற்றி அமைப்பதற்கு மதிப்பீடு ரூ.6.90 இலட்சத்தில் | **தீர்மானம் எண்.918 அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | தயார் செய்யப்பட்டுள்ளது. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி பணியை மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை குடிநீர் வழங்கல் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3. இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண்.00927/2023/இ1** | |
| 3 | பொள்ளாச்சி நகராட்சி மார்க்கெட் ரோடு நீருந்து நிலையத்திலிருந்து 100HP HSC மற்றும் 215HP HSC மோட்டார் மற்றும் பம்பு மூலம் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நகரில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு நீர் நிரப்பப்பட்டு பொதுமக்களுக்கு சீரான முறையில் வழங்கப்பட்டு வருகிறது. தற்பொழுது 100HP Unit–II ஆனது முற்றிலும் தேய்மானம் அடைந்து இயக்க முடியாத நிலையில் உள்ளதால் புதிய 100HP Unit–II HSC மோட்டார் மற்றும் பம்ப்பு ஆனது வாங்குவதற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும், புதிய மோட்டார் மற்றும் பம்ப்பை பொருத்துவதற்கு ஏற்கனவே உள்ள பழைய மோட்டார் மற்றும் பம்ப்பை கழற்றி பம்ப்பு பெட்டை அகற்றி விட்டு புதிய மோட்டார் பம்பு மற்றும் மோட்டார் அமைப்பதற்கு ஏதுவாக Bed அமைக்க வேண்டும். மேலும் புதிய பம்ப்பு செட்டை Erection மற்றும் Commissioning செய்து இயக்க வேண்டி உள்ளது. இப்பணியை மேற்கொள்ள ரூ.2.90 இலட்சத்தில் தயார் செய்யப்பட்டுள்ளது. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி பணியை மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை குடிநீர் வழங்கல் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்.929/2024/இ1** | **தீர்மானம் எண்.919 அனுமதிக்கப்பட்டது** |
| 4 | பொள்ளாச்சி நகராட்சி அம்பராம்பாளையம் நீரேற்று நிலையத்தில் உள்ள Raw water 125 HP, 60 HP Unit–I, II மற்றும் 80 HP Pumpsetயை கொண்டு அம்பராம்பாளையம் ஆற்றில் இருந்து நீர் எடுக்கப்பட்டு ஏரியேட்டர் மற்றும் Filter மூலம் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரானது நகராட்சி பகுதிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதில் 125 HP Motor மற்றும் 60 HP Unit–I Vertical Motor யின் Starter முற்றிலம் பழுதடைந்து இயக்க முடியாமல் உள்ளது. இதனால் 60HP Unit–II மற்றும் 80HP Motor அதிக நேரம் இயக்க வேண்டிய நிலையில் உள்ளது. மேலும் நகருக்கு தேவையான அளவு நீர், ஆற்றில் இருந்து எடுக்க இயலவில்லை. இதனால் நகருக்கு குடிநீர் வழங்குவதில் காலதாமதம் ஏற்படுகிறது. எனவே, மேற்காண் 125HP Submergible motor மற்றும் 60HP Vertical Motorக்கு புதிய Starter பொருத்தி இயக்க வேண்டிய நிலையில் உள்ளது. புதிய Starter வாங்குதல் | **தீர்மானம் எண்.920 அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | மற்றும் பொருத்துதல் பணிக்கு ரூ.11.60 இலட்சத்தில் தயார் செய்யப்பட்டுள்ளது. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி பணியை மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை குடிநீர் வழங்கல் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3. இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண். 927 /2024/இ1** | |
| 5 | பொள்ளாச்சி நகராட்சி மக்களின் குடிநீர் தேவைகளுக்கு அம்பராம்பாளையம் தலைமை நீரேற்று நிலையத்தில் 630 KVA மற்றும் 315 KVA மின்மாற்றிகள் மற்றும் 650 HP (220HPX3 Nos (Clear water), 100HPX2Nos(CW), 75HPX2Nos(CW), 125HP sub motor (Rawwater) 80HP(RW), 60HPX2(RW), 12.5HP (Wash water), குளோரின் மற்றும் Clarifuculator) மின்மோட்டார்கள் பயன்பாட்டில் உள்ளன.<br>மேலும், நகராட்சிக்குட்பட்ட மார்க்கெட் ரோடு நீருந்து நிலையத்தில் 315KVA X 2 மின்மாற்றிகள், 500 KVA மின் ஆக்கி மற்றும் 450 HP (215HPX2Nos, 125HPX2Nos, 100HPX2Nos) மின் மோட்டார்கள் பயன்பாட்டில் உள்ளன.<br>தலைமை நீரேற்று நிலைய மின் மோட்டார்கள் மூலம் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நீரேற்றம் செய்யப்பட்டு மார்க்கெட்ரோடு நீருந்து நிலையத்தை அடைந்து மார்க்கெட்ரோடு நீருந்து நிலையத்தில் இருந்து நகரில் உள்ள 9 உயர்மட்ட தொட்டிகள் மற்றும் 2 தரைத்தள தொட்டிகளுக்கு நீருந்து செய்யப்பட்டு, குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.<br>மேற்காண் பயன்பாட்டில் உள்ள மின்சாதனங்களை பராமரித்து இயக்க மின்பணியாளர்கள் தரம் II நிலையில் 6 மின்பணியாளர்கள் பணியாற்றிய நிலையில் தற்சமயம் அரசாணை 10ன்படி பொள்ளாச்சி நகராட்சிக்கு மின்பணியாளர் நிலை-Iல் ஒரு (1) மின்பணியாளர் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளதால் குடிநீர் பணியின் அத்தியாவசிய அவசியம் கருதி மேற்காண் மின் மோட்டார்கள், மின் ஆக்கிகள் மற்றும் மின் மாற்றிகளை இயக்கி பராமரிப்பதற்கு மின்பணியாளர்கள் தரம் IIல், 5 நபர்கள் தேவைப்படுகிறார்கள். எனவே வெளிக்கொணர்வு மூலம் (Out sourcing) 5 எண்ணிக்கையில் மின் பணியாளர் தரம் II யை அமர்த்திக்கொள்வதற்கு மூன்று மாத காலத்திற்கு ரூபாய்.3,69,000/- க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண்.928/2024/இ1** | **தீர்மானம் எண்.921**<br>**அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr>
<td>6</td>
<td>2024 – 2025 ஆம் ஆண்டிற்கு இந்நகராட்சி நகரமன்றத் தலைவர், ஆணையாளர், நகரமன்றத் துணைத் தலைவர், நகரமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் அலுவலக பணிக்காக வெளியூர் சென்று வரவும், நிர்வாக ரீதியாக பயிற்சிக்கு வெளியூர் சென்று வருவதற்குரிய பயணப்படி மற்றும் வெளியூரில் இருந்து பணிமாறுதலில் வந்தமைக்கு மாறுதல் பயணப்படி ஆகியவைகளை ஆணையாளர் அவர்களே உடனுக்குடன் வழங்குவதற்கும், இதற்கான உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.<br><u>அலுவலகக் குறிப்பு:</u> அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 10402/2023/பி2</td>
<td>தீர்மானம் எண்.922<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>7</td>
<td>பொள்ளாச்சி நகர பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் தடையின்றி விநியோகம் செய்ய ஏதுவாக அம்பராம்பாளையம் தலைமை நீரேற்று நிலையம், சுத்திகரிப்பு நிலையம் மார்க்கெட்ரோடு நீர் உந்து நிலையம் ஆகியவற்றில் நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் கீழ்க்கண்டவாறு Outsourcing முறையில் பணியாட்கள் சுயஉதவிக்குழு மூலம் அமர்த்தி பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்து வரப்படுகிறது.
<table>
<tr><td>1.</td><td>அம்பராம்பாளையம் தலைமை நீரேற்று நிலையம்</td><td>–</td><td>3 நபர்கள்</td></tr>
<tr><td>2.</td><td>மார்க்கெட் ரோடு பூஸ்டர்</td><td>–</td><td>3 நபர்கள்</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td></td><td>6 நபர்கள்</td></tr>
</table>
தற்போது பணியாட்களை Outsourcing முறையில் மூன்றாண்டுகளுக்கு பணியமர்த்திட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.G.O.(Ms).No.112, Dated.17.08.2022–ன் படி ஒப்பந்த அடிப்படையில் பணியாட்களை அமர்த்திக் கொள்ள அனுமதி அளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதற்கேற்ப பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் விநியோகத்தில் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை விதிமுறைகளுக்குட்பட்டு பணியாளர்களை அமர்த்திக்கொள்ள மதிப்பீடு தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் நிர்வாக அனுமதி மற்றும் தலைமைப் பொறியாளர் அவர்களின் தொழில்நுட்ப அனுமதி பெற்றபின்புதான் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொள்ள இயலும். ஒப்பந்தபுள்ளிகள் கோரும் வரையிலும் குடிநீர் விநியோக பணிகள் தடையின்றி நடைபெற வேண்டியுள்ளதால், தற்பொழுது வரை மேற்படி பணியை மேற்கொள்ளும் நிறுவனமான காளியம்மன் மகளிர் சுய உதவிக்குழு, பொள்ளாச்சி அவர்களின் 21.11.2022–ம் தேதிய விலைப்புள்ளி பட்டியலில் விலைவிகிதமான 6 நபர்களுக்கு நாள்ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.576.00 வீதம் மேலும் நான்கு மாதங்களுக்கு (ஜனவரி 2024) மேற்படி பணி மேற்கொள்ள ரூ.1.10 இலட்சம் செலவினத்திற்கும், மேற்படி நிறுவனமே அப்பணியை மேற்கொள்வதற்கும், மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.</td>
<td>தீர்மானம் எண்.923<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி செலவினத் தொகையை குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.
3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 2012/2022/இ1

8

**தீர்மானம் எண்.924 அனுமதிக்கப்பட்டது**

பொள்ளாச்சி நகர பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் தடையின்றி விநியோகம் செய்ய ஏதுவாக நகராட்சி பகுதிகளில் உள்ள 9 உயர்மட்ட நீர் தேக்க தொட்டிகள் மற்றும் 2 தரைமட்ட நீர் தேக்க தொட்டிகள் ஆகியவற்றில் நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் கீழ்க்கண்டவாறு **Outsourcing** முறையில் சுயஉதவிக்குழு மூலம் பணியாட்களை அமர்த்தி பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்து வரப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | 1). வெங்கடேசா காலனி **OHT**<br>2).Shumps – 2 Nos | – | 3 நபர்கள் |
| 2. | மகாலிங்கபுரம் **OHT** (2 Nos) | – | 3 நபர்கள் |
| 3. | சுதர்சன் நகர் **OHT** | – | 3 நபர்கள் |
| 4. | கே.ஆர்,ஜி,பி நகர் **OHT** | – | 3 நபர்கள் |
| 5. | **VKV** லே அவுட் **OHT** | – | 2 நபர்கள் |
| 6. | **KC** பார்க் **OHT** | – | 3 நபர்கள் |
| 7. | சோமசுந்தரம் லே அவுட் **OHT** | – | 2 நபர்கள் |
| 8. | ஜோதி நகர் **OHT** | – | 2 நபர்கள் |
| | மொத்தம் | | **21 நபர்கள்** |

தற்போது பணியாட்களை **Outsourcing** முறையில் மூன்றாண்டுகளுக்கு பணியமர்த்திட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.G.O.(Ms).No.112, Dated.17.08.2022–ன் படி ஒப்பந்த அடிப்படையில் பணியாட்களை அமர்த்திக் கொள்ள அனுமதி அளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதற்கேற்ப பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் விநியோகத்தில் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை விதிமுறைகளுக்குட்பட்டு பணியாளர்களை அமர்த்திக்கொள்ள மதிப்பீடு தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் நிர்வாக அனுமதி மற்றும் தலைமைப் பொறியாளர் அவர்களின் தொழில்நுட்ப அனுமதி பெற்றபின்புதான் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொள்ள இயலும். ஒப்பந்தபுள்ளிகள் கோரும் வரையிலும் குடிநீர் விநியோக பணிகள் தடையின்றி நடைபெற வேண்டியுள்ளதால், தற்பொழுது வரை மேற்படி பணியை மேற்கொள்ளும் நிறுவனமான காளியம்மன் மகளிர் சுய உதவிக்குழு, பொள்ளாச்சி அவர்களின் 09.02.2023–ம் தேதிய விலைப்புள்ளி பட்டியலில் விலைவிகிதமான நாள்ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.576.00 வீதம் மேலும், ஒரு மாதத்திற்கு ஜனவரி (2024) மேற்படி பணி மேற்கொள்ள ரூ.4.30 இலட்சம் செலவினத்திற்கும், மேற்படி நிறுவனமே அப்பணியை மேற்கொள்வதற்கும், மன்ற அனுமதி

<table>
<tr>
<td></td>
<td>வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு :</u><br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்படி செலவினத் தொகையை குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.<br>3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்:2012/2022/இ1</td>
<td></td>
</tr>
<tr>
<td>9</td>
<td>பொள்ளாச்சி நகராட்சி பொது நிதியின் கீழ் அண்ணா மத்திய பேருந்து நிலையத்தில் பயணிகள் காத்திருப்பு வளாகத்தினை இடித்து அப்புறப்படுத்துதல் (பேஸ் –I) பணிக்கு ரூ.2.73 இலட்சம் மதிப்பீட்டிற்கு 30.01.2024 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.
<table>
<tr><td>1.</td><td>திரு.U.ஆரீஃப்கான், பொள்ளாச்சி.</td><td>மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.01% குறைவு.</td></tr>
<tr><td>2.</td><td>M/s.திருமலை அன் கோ, பொள்ளாச்சி.</td><td>மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.34% அதிகம்.</td></tr>
</table>
வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.U. ஆரீஃப்கான், பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு :</u><br>1. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.1652/2023/மாதி–1, நாள்.02.01.2024.<br>2. மேற்காண் பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.01% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.U.ஆரீஃப்கான், பொள்ளாச்சி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்:5890/2023/இ1</td>
<td>தீர்மானம் எண்.925 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>10</td>
<td>நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.30ல் உள்ள காந்திமண்டபம் வீதி மற்றும் தெப்பக்குளம் வீதி சந்திப்பில் உள்ள சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் மிகவும் பழுதடைந்துள்ளதால், மழைக்காலங்களில் அடைப்பு ஏற்படுவதுடன் சாலையில் வழிந்தோடி சாலையை சேதப்படுத்துவதால், புதிதாக மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2.10 இலட்சத்திற்கு நகரமன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.</td>
<td>தீர்மானம் எண்.926 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலக குறிப்பு :</u>**<br>1. இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2.10 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. இப்பணியை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்:0865/2024/இ1 | |
| 11 | நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.30ல் உள்ள திருநீலகண்டர் வீதியில் ஏற்கனவே உள்ள மழைநீர் வடிகால் பக்க சுவர்கள் மிகவும் பழுதுபட்டுள்ளதால், மழைநீர் வடிகாலின் பக்கசுவர்களை புதிதாக மழைநீர் வடிகால் அமைத்தல் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3.50 இலட்சத்திற்கு நகரமன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>1. இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3.50 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. இப்பணியை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்:06252/2023/இ1 | **தீர்மானம் எண்.927 அனுமதிக்கப்பட்டது** |
| 12 | நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.30ல் உள்ள தெப்பக்குளம் வீதியில் மாரியம்மன் கோவில் பின்புறம் ஏற்கனவே உள்ள சிறுபாலம் மிகவும் பழுதடைந்துள்ளதால், மழைக்காலங்களில் தண்ணீர் தேங்குவதுடன் சாலையில் வழிந்தோடி சுகாதார கேட்டினை உருவாக்குவதால் அவ்விடத்தில் சிறுபாலம் அமைத்தல் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3.90 இலட்சத்திற்கு நகரமன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>1. இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3.90 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. இப்பணியை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்:0865/2024/இ1 | **தீர்மானம் எண்.928 அனுமதிக்கப்பட்டது** |
| 13 | நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.30ல் உள்ள தெப்பக்குளம் வீதி முத்துதேவர் சந்து பகுதியில் ஏற்கனவே உள்ள சிமெண்ட் கான்கிரீட் நடைபாதை மிகவும் பழுதடைந்து பொதுமக்கள் உபயோகத்திற்க்கு ஏற்றதாக இல்லாத காரணத்தினால் அவ்விடத்தில் சிமெண்ட் கான்கிரீட் நடைபாதை அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1.50 இலட்சத்திற்கு நகரமன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>1. இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. இப்பணியை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்:06252/2023/இ1 | **தீர்மானம் எண்.929 அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| 14 | பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட மார்க்கெட் ரோடு நீர் உந்து நிலையம் 1996 ஆம் ஆண்டு கட்டப்பட்டு 1999 ஆம் ஆண்டு நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் 2009 ஆம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. 15 ஆண்டுக்கு மேலாக புனரமைப்பு மேற்கொள்ளாமல் உள்ளது. தற்போது 15வது நிதிக்குழு மூலம் புதிய மின்மாற்றி M.V.Panel மற்றும் Starter வாங்கப்பட்டுள்ளது. மேலும் நகராட்சியின் குடிநீர் நிதியை கொண்டு புதிய 100HP Pump மற்றும் Motor வாங்கப்பட்டுள்ளது. மேற்காண் Equipment களை நிறுவுவதற்கு கட்டிடங்களில் பழுதுகள் மேற்கொண்டு புனரமைக்க வேண்டியுள்ளதால், அத்துடன் கட்டிடங்களுக்கு மற்றும் கதவு ஜன்னல்களுக்கு வண்ணங்கள் அடிக்க ரூ.4.80 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை குடிநீர் வழங்கல் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்:**1311/2024/இ1** | **தீர்மானம் எண்.930**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 15 | பொள்ளாச்சி நகராட்சிக்குக்குட்பட்ட மார்க்கெட் ரோடு நீர் உந்து நிலையத்தில் உள்ள 100 HP Pump மற்றும் Motor மூலம் ஜோதிநகர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மற்றும் வெங்கடேசா காலனி தரைமட்ட தொட்டிகளுக்கு குடிநீர் உந்தப்பட்டு பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. தற்போது 100 HP Pump set ஆனது புதிதாக வாங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே உள்ள 300mm DI Value மற்றும் NRV பழுதடைந்து உள்ளதால் குடிநீர் ஆனாது அழுத்தத்தின் காரணமாக மீண்டும் மற்றொரு Pump – ன் மூலம் தரைமட்ட தொட்டிற்கே செல்கிறது. இதனால் மேல்நிலை தொட்டிக்கு செல்லும் குடிநீர் அளவு குறைகிறது. எனவே, பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு புதிய 300 DI Value மற்றும் NRV பொருத்துவதன் மூலம் அதிக அளவு குடிநீர் உந்தம் செய்யப்பட்டு பொதுமக்களுக்கு சீரான கால இடைவெளியில் குடிநீர் வழங்க இயலும். இப்பணிக்கு ரூ.6.10 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை குடிநீர் வழங்கல் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3. இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்:**1313/2024/இ1** | **தீர்மானம் எண்.931**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 16 | பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட 9 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளுக்கு மார்க்கெட் ரோடு நீர் உந்து நிலையத்திலிருந்து நீர் ஏற்றம் செய்யப்படுகிறது. நகரின் அனைத்து பகுதிகளுக்கு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் குடிநீர் நிரப்பப்பட்டு பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இதில் வெங்கடேசா காலனி தரைமட்ட தொட்டி மற்றும் | **தீர்மானம் எண்.932**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | மகாலிங்கபுரம் மேல்நிலை தொட்டிகளின் Delivery valve 300mm DI ஆனது தேய்மானம் அடைந்து தொட்டியில் நிரப்பப்படும் குடிநீர் வீணாகுவதால் குடிநீர் பற்றாக்குறை ஏற்படுவதுடன் சீரான கால இடைவெளியில் குடிநீர் வழங்க இயவில்லை. எனவே, குடிநீர் சேமித்து வைத்து சீரான கால இடைவெளியில் பொது மக்களுக்கு சீரான அளவு குடிநீர் வழங்கும் பொருட்டு நான்கு 300 mm DI Valve ஆனது பொருத்த வேண்டியுள்ளது. மேலும் மார்க்கெட் ரோடு நீர் உந்து நிலையத்தில் புதிய 300 mm DI Pipe அமைக்கும் பணி நடைபெறுவதால், இரண்டு புதிய 300 mm DI NRV பொருத்தும் பட்சத்தில் 100 HP Sub Mergable motor மற்றும் Pump யை இயக்க இயலும். மேற்காண் பணியை மேற்கொள்ள ரூ.8.20 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை குடிநீர் வழங்கல் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3. இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்:1312/2024/இ1 | |
| 17 | பொள்ளாச்சி நகராட்சிக்குச் சொந்தமாக கோட்டூர் ரோடு நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, ஆர்.கே நகர் பள்ளி, வடுகபாளையம் பள்ளி, பாலக்காடு சாலையில் நகராட்சி அலுவலகம், பேருந்து நிலையங்கள் மற்றும் உடுமலை சாலையில் அம்மா உணவகமும் செயல்பட்டு வருகிறது.<br>பள்ளிகளில் பயிலும் மாணவர்கள், இவ்விடங்களுக்கு வந்து செல்லும் பொதுமக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு R.O.Plant–கள் அமைக்கப்பட்டுள்ளன.<br>அமைக்கப்பட்ட R.O.Plant –கள் மூலம் பெறப்படும் குடிநீரை அருந்துபவர்களுக்கு, எவ்வித பிரச்சனையும் ஏற்படா வண்ணம், R.O.Plant–கள் வருடந்தோறும் ஆய்வுசெய்து, பழுதான உபகரணங்களை மாற்றி விட்டு, புதியதாக மாற்றவும் மற்றும் பழுது ஏற்படாமல் தொடர்ந்து இயங்கும் வண்ணம் கண்காணிக்க வேண்டியுள்ளது.<br>எனவே, அமைக்கப்பட்ட R.O.Plant–கள் வருடம் முழுவதும் பராமரிக்க ரூ.6.20 இலட்சம் செலவினம் ஆகும்.<br>தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை குடிநீர் வழங்கல் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3. இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி | **தீர்மாணம் எண்.933**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | பெற்று மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்:1080/2024/இ1 | |
| 18 | நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.28–ல் உள்ள கண்ணப்பன் நகர் மேற்குப்பகுதியில் ஓடையின் குறுக்கே கட்டப்பட்டுள்ள சிறுபாலத்தின் இருபகுதி பக்கவாட்டு சுவர்கள் மிகவும் சேதமடைந்துள்ளதால், அவற்றை இடித்து அப்புறப்படுத்தி புதிய பக்கவாட்டு சுவர்கள் மற்றும் கான்கிரீட் மேற்தளம் அமைத்து பாலத்தை புதுப்பிக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு நகரமன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>1. இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. இப்பணியை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்: **1008/2024/இ1** | **தீர்மானம் எண்.934 அனுமதிக்கப்பட்டது** |
| 19 | நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.02ல் உள்ள வடுகபாளையம் (MCC) நுண்ணுயிர் உரமாக்கல் கட்டிடத்தின் மேற்குபுரம் உள்ள மயானத்திற்கு செல்லும் பாதைக்கும் இடையில் பாதுகாப்பு சுவர் ஏதும் இல்லாத காரணத்தால், வெளிஆட்கள் உட்புறம் சென்று சமூக விரோத செயலில் ஈடுபடுவதால், அதை தடுக்கும் பொருட்டு பாதுகாப்பு கருதி MCC சென்டர் சுற்றிலும் GI Galvalium sheet கொண்டு தடுப்பு செய்யவும், முன்புறம் இரும்பு கேட் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.8.60 இலட்சத்திற்கு நகரமன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>1. இப்பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.8.60 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. இப்பணியை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்: **1128/2024/இ1** | **தீர்மானம் எண்.935 அனுமதிக்கப்பட்டது** |
| 20 | பொள்ளாச்சி நகராட்சிக்குச் சொந்தமான நகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி பாலக்காடு சாலையில் செயல்பட்டு வருகிறது, பள்ளி வளாகத்தில் பின்புறம் விளையாட்டு மைதானம் உள்ளது. இவ்விளையாட்டு மைதானத்தில் நகராட்சிப் பகுதியில் வாழும் பொதுமக்கள் மற்றும் சுற்று வட்டாரப் பகுதியில் வாழும் பொதுமக்களும் பயன்பெறும் வகையில் அனைத்து வசதிகளுடன் கூடிய 'ஸ்டேடியம்' நமக்கு நாமே திட்டத்தில் ரூ.500.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பணியை செயல்படுத்த ஒரு கலந்தாலோசகர் நியமனம் செய்து பணிக்கு தேவையான மதிப்பீடுகள் மற்றும் வரைபடங்கள் தயார் செய்து சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. மேற்காணும் கலந்தாலோசகர் மூலம் விரிவான திட்ட அறிக்கை மதிப்பீடு தயார் செய்ய, உத்தேச செலவினம் ரூ.8.80 இலட்சம் ஆகும். மேற்காண் உத்தேச செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | **தீர்மானம் எண்.936 அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | **அலுவலக குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டு பணி மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். 6145/2023/இ1** | |
| 21 | பொள்ளாச்சி நகராட்சிக்குச் சொந்தமான கால்நடை சந்தை கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக மார்க்கெட் ரோட்டில் செயல்பட்டு வருகிறது. இச்சந்தையை மேம்படுத்தி புதிதாக கால்நடை சந்தை வளாகம் அமைக்க ரூ.603.00 இலட்சத்திற்கு விரிவான திட்ட அறிக்கை மதிப்பீடு தயார் செய்யவேண்டியுள்ளது. நகராட்சி வசம் போதிய பணியாளர்கள் இல்லாததால், இப்பணியை செயல்படுத்த ஒரு கலந்தாலோசகர் நியமனம் செய்து பணிக்கு தேவையான மதிப்பீடுகள் மற்றும் வரைபடங்கள் தயார் செய்து சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. மேற்காணும் பணிக்கு கலந்தாலோசகர் மூலம் விரிவான திட்ட அறிக்கை மதிப்பீடு தயார் செய்ய, உத்தேச செலவினம் ரூ.9.90 இலட்சம் ஆகும். மேற்காண் உத்தேச செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டு பணி மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்.2680/2022/இ1** | **தீர்மானம் எண்.937**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 22 | பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான வதை சாலைக்கு தமிழ்நாடு மாசுக்காட்டுப்பாட்டு வாரியத்தில் அனுமதி பெற வேண்டி மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், கோவை அவர்களிடமிருந்து வரப்பெற்ற கடிதத்தில் தெரிவித்துள்ளபடி பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான வதை சாலைக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெற மாசுக்கட்டுப்பாடு வாரியத்திற்கு 2022- 2023, 2023-2024-ஆம் ஆண்டிற்கான அனுமதி பெற கட்டணம் ரூ.97,800/- செலுத்த வேண்டி மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் கோவை அவர்கள் கடிதம் வாயிலாக தெரிவித்தன் படி பொள்ளாச்சி நகராட்சி சொந்தமான வதை சாலைக்கு மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அனுமதி பெற வேண்டி 2022-2023, 2023-2024 ஆம் ஆண்டிற்கான கட்டணத்தொகையை அலுவலகத்திற்கு வழங்க ரூ.1,00,000/-ற்கு செலவினத்தொகைக்கு மன்ற அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது, | **தீர்மானம் எண்.938**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலகக் குறிப்பு :</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**[ ந.க.எண் : எச்2/0591/2024 ]** | |
| 23 | பொள்ளாச்சி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மறுசுழற்சி செய்ய இயலாத பிளாஸ்டிக் பொருட்கள் தினசரி தனியார் நிறுவனம் மூலம் அரியலூர் சிமெண்ட் நிறுவனத்திற்கு கொண்டு செல்ல 15.02.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்காணுமாறு.<br><table><tr><th>வ. எண்</th><th>பெயர்</th><th>மதிப்பீட்டு தொகை</th></tr><tr><td>1</td><td>M/s. Hindustan SWM Solution Pvt Ltd,<br>103, P.S.Sivasamy Salai,<br>Mylapore,<br>Chennai– 600 004</td><td>ரூ. 24,190/-</td></tr><tr><td>2</td><td>M/s. Elixneering Solutions,<br>8, Agamudyar Cross Street,<br>Thiruppuranam,<br>Sivagangai– 630 611</td><td>ரூ.24,226 /-</td></tr></table>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. Hindustan SWM Solution Pvt Ltd, 103, P.S.Sivasamy Salai, Mylapore, Chennai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், பணி உத்திரவு வழங்கி பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்லைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>**[ ந.கஎண் : எச்2/3563/2023 ]** | **தீர்மானம் எண்.939 அனுமதிக்கப்பட்டது** |
| 24 | பொள்ளாச்சி நகராட்சி பகுதிகளில் பல்வேறு திட்டப்பணிகளான சாலைப்பணிகள், குடிநீர் பணிகள், பாதாள சாக்கடை பணிகளில் வீடுகளுக்கு இணைப்பு வழங்கும் பணிகள் மற்றும் பொதுமக்களுக்கு தேவையான பல்வேறு அடிப்படை வசதிப் பணிகள் நடைபெற்று வருவதால், பணிகளை கண்காணிக்க போதிய தொழில் நுட்ப பணியாளர்கள் இல்லாத காரணத்தினால், Outsourcing முறையில் தொழில்நுட்ப உதவியாளர் கிரேடு–I–ல் 1 நபர், தொழில்நுட்ப உதவியாளர் கிரேடு–II–ல் 2 நபர் மற்றும் தொழில் நுட்ப உதவியாளர் கிரேடு–III–ல் 1 நபர் ஆகிய 4 தொழில்நுட்ப உதவியாளர்களை பணிக்கு அமர்த்த வேண்டியுள்ளது. பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் (2024) ஆகிய 3 மாதங்களுக்கு பணியினை தொழில்நுட்ப உதவியாளர்களை கொண்டு மேற்கொள்ளவும், மேற்கண்ட பணியாளர்களுக்கான ஊதியத்தினை Schedule of rates 2022– | **தீர்மானம் எண்.940 மார்ச் மற்றும் ஏப்ரல் (2024) ஆகிய இரண்டு மாதங்களுக்கு மட்டும் அனுமதிக்கப்பட்டது.** |

<table>
<tr><td></td><td>23–க்கான விலைப்பட்டியலில் உள்ளவாறு EPF, ESI மற்றும் Insurance ஆகியவற்றுடன் சேர்த்து உண்டான மதிப்பீட்டு தொகை ரூ.5.40 இலட்சம் ஆகும். மேற்கண்ட செலவு தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு :</u><br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கான செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 2072/2022/இ1</td><td></td></tr>
<tr><td>25</td><td>பொள்ளாச்சி நகர பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் தடையின்றி விநியோகம் செய்ய ஏதுவாக நகராட்சி பகுதிகளில் உள்ள 9 உயர்மட்ட நீர் தேக்க தொட்டிகள் மற்றும் 2 தரைமட்ட நீர் தேக்க தொட்டிகள் ஆகியவற்றில் நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் கீழ்க்கண்டவாறு Outsourcing முறையில் பணியாட்களை அமர்த்தி பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியுள்ளது.
<table>
<tr><td>1.</td><td>1). வெங்கடேசா காலனி OHT<br>2).Shumps – 2 Nos</td><td>–</td><td>3 நபர்கள்</td></tr>
<tr><td>2.</td><td>மகாலிங்கபுரம் OHT (2 Nos)</td><td>–</td><td>3 நபர்கள்</td></tr>
<tr><td>3.</td><td>சுதர்சன் நகர் OHT</td><td>–</td><td>3 நபர்கள்</td></tr>
<tr><td>4.</td><td>கே.ஆர்,ஜி,பி நகர் OHT</td><td>–</td><td>3 நபர்கள்</td></tr>
<tr><td>5.</td><td>VKV லே அவுட் OHT</td><td>–</td><td>2 நபர்கள்</td></tr>
<tr><td>6.</td><td>KC பார்க் OHT</td><td>–</td><td>3 நபர்கள்</td></tr>
<tr><td>7.</td><td>சோமசுந்தரம் லே அவுட் OHT</td><td>–</td><td>2 நபர்கள்</td></tr>
<tr><td>8.</td><td>ஜோதி நகர் OHT</td><td>–</td><td>2 நபர்கள்</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td></td><td>21 நபர்கள்</td></tr>
</table>
தற்போது பணியாட்களை Outsourcing முறையில் மூன்றாண்டுகளுக்கு பணியமர்த்திட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.G.O.(Ms).No.112, Dated.17.08.2022–ன் படி ஒப்பந்த அடிப்படையில் பணியாட்களை அமர்த்திக் கொள்ள அனுமதி அளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதற்கேற்ப பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் விநியோகத்தில் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை விதிமுறைகளுக்குட்பட்டு பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் (2024) ஆகிய மூன்று மாதத்திற்கு பணியாளர்களை அமர்த்திக்கொள்ள உண்டான உத்தேச செலவின மதிப்பீடுத் தொகை ரூ.14.10 இலட்சம் ஆகும். தயார் செய்யப்பட்ட செலவினத்திற்கும், மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.</td><td>தீர்மானம் எண்.941<br>மார்ச் மற்றும் ஏப்ரல் (2024) ஆகிய இரண்டு மாதங்களுக்கு மட்டும் அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

<table>
<tr><td></td><td><u>அலுவலகக்குறிப்பு :</u><br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்படி செலவினத் தொகையை குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.<br>3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 2012/2022/இ1</td><td></td></tr>
<tr><td>26</td><td>பொள்ளாச்சி நகர பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் தடையின்றி விநியோகம் செய்ய ஏதுவாக அம்பராம்பாளையம் தலைமை நீரேற்று நிலையம், சுத்திகரிப்பு நிலையம் மார்க்கெட்ரோடு நீர் உந்து நிலையம் ஆகியவற்றில் நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் கீழ்க்கண்டவாறு Outsourcing முறையில் பணியாட்கள் அமர்த்தி பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியுள்ளது.
<table>
<tr><td>1.</td><td>அம்பராம்பாளையம் தலைமை நீரேற்று நிலையம்</td><td>–</td><td>4 நபர்கள்</td></tr>
<tr><td>2.</td><td>மார்க்கெட் ரோடு பூஸ்டர்</td><td>–</td><td>3 நபர்கள்</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td></td><td>7 நபர்கள்</td></tr>
</table>
பணியாட்களை Outsourcing முறையில் மூன்றாண்டுகளுக்கு பணியமர்த்திட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். G.O.(Ms).No.112, Dated.17.08.2022–ன் படி ஒப்பந்த அடிப்படையில் பணியாட்களை அமர்த்திக் கொள்ள அனுமதி அளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதற்கேற்ப பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் விநியோகத்தில் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை விதிமுறைகளுக்குட்பட்டு பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் (2024) ஆகிய மூன்று மாதத்திற்கு பணியாளர்களை அமர்த்திக்கொள்ள உண்டான உத்தேச செலவின மதிப்பீடுத் தொகை ரூ.4.80 இலட்சம் ஆகும். தயார் செய்யப்பட்ட செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு :</u><br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்படி செலவினத் தொகையை குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.<br>3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 2012/2022/இ1</td><td>தீர்மானம் எண்.942<br>மார்ச் மற்றும் ஏப்ரல் (2024) ஆகிய இரண்டு மாதங்களுக்கு மட்டும் அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>27</td><td>தமிழகத்தில் கொரோனா தொற்றுநோய் பரவல் காரணமாக முழு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்ட காலங்களில் 01.06.2020 முதல் 31.08.2020 வரை (முதல் அலை) மற்றும் 01.05.2021 முதல் 30.06.2021 வரை (இரண்டாம் அலை) ஆகிய மாதங்களுக்கு குத்தகை இனங்களுக்கான தொகை தள்ளுபடி செய்து வரப் பெற்றுள்ள அரசாணை (பத்தாண்டு) எண்.337 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி4) துறை நாள்.16.06.2023 மன்றத்தின் பார்வைக்கும்</td><td>தீர்மானம் எண்.943<br>1.அனுமதிக்கப்பட்டது.<br>2.அரசாணை (பத்தாண்டு) எண்.337, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | பதிவிற்கும் வைக்கப்படுகிறது. மேற்படி அரசு ஆணையில் நகராட்சிகளில், 80 நகராட்சிக்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதில் பொள்ளாச்சி நகராட்சி சேர்க்கப்படவில்லை. அண்ணா பேருந்து நிலையம் மற்றும் அண்ணா கூடுதல் பேருந்து நிலையம் பொள்ளாச்சி நகராட்சி குத்தகைத்தாரர்கள், மேற்படி அரசு ஆணையை, சுட்டிக்காட்டி, அதன்படி வாடகையை தள்ளுபடி செய்ய 22.08.2023இல் மனு அளித்துள்ளார்கள். எனவே மேலே கண்டுள்ள அரசு ஆணையில் தெரிவித்துள்ளபடி, அண்ணா பேருந்து நிலையம் மற்றும் அண்ணா கூடுதல் பேருந்து நிலையம் பொள்ளாச்சி நகராட்சி குத்தகைத்தாரர்கள், மேற்கண்டுள்ள காலங்களுக்கு குத்தகை இனங்களுக்கான தொகையை தள்ளுபடி செய்ய மன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகின்றது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>அரசின் அனுமதியினை பெற உரிய வழிமுறையாக கருத்துரு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்:180/2022/அ6** | **வழங்கல்(ந.நி.4) துறை நாள்.16.06.2023ல் மற்ற நகராட்சிகளுக்கு வழங்கியது போல பொள்ளாச்சி நகராட்சியில் தகுதியுள்ள குத்தகை இனங்களுக்கு 5 மாத வாடகையை தள்ளுபடி செய்ய அரசுக்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது,** |
| 28 | இந்நகராட்சியின் 2023–2024ம் ஆண்டிற்கான வருவாய் மற்றும் மூலதனநிதி, குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் நிதி, மற்றும் ஆரம்பக் கல்விநிதிக்கான திருத்திய வரவு செலவு திட்ட மதிப்பீடு மற்றும் 2024–2025ம் நிதியாண்டிற்கான வருவாய் மற்றும் மூலதனநிதி, குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் நிதி மற்றும் ஆரம்பக் கல்விநிதிக்கான உத்தேச வரவு செலவு திட்ட மதிப்பீடு தயார் செய்து மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 515/2020/பி1** | **தீர்மானம் எண்.944 அனுமதிக்கப்பட்டது.** |

**(ஒப்பம்) திருமதி.ந.சியாமளா**
**நகர்மன்ற தலைவர்**
**பொள்ளாச்சி நகராட்சி**

**//உண்மை நகல்//**

**ஆணையாளர்**
**பொள்ளாச்சி நகராட்சி**